அதிகாரி விசாரிக்கும்பொழுது, ஏற்கெனவே அவர்களிடம் தொடர்ந்து நஷ்டம் எற்பட்ட காரணத்தாலும், ரா மெட்டீரியல்ஸ் வாங்கக் கூட பணம் இல்லாத காரணத்தாலும், தொழிலாளர்களை எந்தவிதத்திலும் வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்ற எண்ணத்தில் 34 ஆயிரம் மனித வேலை நாட்கள் வேலையே இல்லாமல் அவர்களுக்கு சம்பளத்துடன் லீவு தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இப்படி செய்ய எங்களால் இயலாது என்றும், எங்களுக்கு 500 அல்லது 600 தொழிலாளர்களை 'லே-ஆப்' செய்வதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்றும் தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களிடம் கேட்டபோது, அதை விசாரித்து ஆணையாளர் அவர்கள் கூறுகின்றதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்ற காரணத்தால் அவர்களுக்கு 'லே-ஆப்'-க்கு வாய்ப்புத்தந்து அனுமதி அளித்திருக்கிறார்கள். நீங்கள் இப்படி 500 அல்லது 600 தொழிலாளர்களை 'லே-ஆப்' செய்வதற்கு அனுமதி அளிக்கவில்லையென்றால் நிச்சயமாக தொழிற்சாலையை மூடுவோம் என்று அவர்கள் சொன்ன காரணத்தால் தொழிலாளர்களும் பாதிப்புக்கு ஆளாகக் கூடாது. 'லே-ஆப்' செய்கிறார்கள் என்றால் தொழிலாளர்களுக்கு பாதி அளவுக்காவது சம்பளம் கிடைக்கும் என்ற காரணத்தால்தான் 'லே-ஆப்' விடப்பட்டிருக்கிறது. மீண்டும் அங்கேயிருக்கின்ற சி. ஐ. டி. யு. தொழிற் சங்கம் அதே அதிகாரிகளிடம் மனு செய்திருக்கின்றது. நீங்கள் 'லே-ஆப்' செய்திருப்பது தப்பு என்று சொல்லி மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் இப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக சம்பளம் தர வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தபோது, அதிகாரிகள் உடனடியாக அவர்களைச் சந்தித்து பேசியபோது அவர்களிடம் பணம் இல்லாத காரணத்தால் உடனடியாகத் தர இயலாது, ஜனவரி மாதச் சம்பளத்தை மார்ச் மாதத்திலும், பிப்ரவரி மாதச் சம்பளத்தை ஏப்ரல் மாதக் கடைசியிலும் தருவதாகச் சொல்லி அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அதையும் பிரதிநிதிகள் ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இருந்தும், திரு. கோவிந்தராஜன் அவர்கள் அதே அதிகாரிகளிடம் ரெவ்யூ பெட்டிசன் போட்டிருக்கிறார். உடனடியாக விசாரித்து ஒரு நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டணம்காத்தான் சோதனைச் சாவடி தொடங்கி தஞ்சை மாவட்டம் மீமிசல் வரை சிலர் கண்மூடித்தனமாகச் சுட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், அண்மையில் பட்டணம்காத்தான் காவல்சாவடி தொடங்கி, தஞ்சை மாவட்டம் மீமிசல் **வரை**

1990 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

துப்பாக்கியால் சிலர் சுட்டுக் கொண்டே சென்றதாலும், இத்துப்பாக்கிச் சூட்டில் காவலர் ஒருவரும், தொழிலாளி ஒருவரும் மரணம் அடைந்ததாலும் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

10-15 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, என்னை ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லி, நான் முதலிலே சொன்ன ஒன்றை ஒத்திவைத்துவிட்ட சாமர்த்தியத்தைப் பாராட்டி, அதற்கு நாளைக்கு வாய்ப்புக் கொடுப்பீர்கள் என்று நம்பி, இதனுடைய விளக்கத்தை நான் சொல்கிறேன். இராமநாதபுரம் ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகிலேயே, 18 ஆம் தேதி பிப்ரவரி மாதம் நமது காவல் சாவடிகளுக்குப் பக்கத்திலே வந்த போராளிகள் சிலர், வண்டியை நிறுத்த சொன்ன பிறகு கூட நிறுத்தாமல், அவர்கள் சுட்டுவிடுவோம் என்று மிரட்டியதோடு, சுட்டு விடுவார்களோ என்று சொல்லுகின்ற அளவுக்கு, அச்சத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு தங்களுடைய செயல்களை வெளிப்படுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கிறார்கள். அங்கிருந்த பெரிய அதிகாரி ராதாகிருஷ்ணன் அவர்களுக்குத் தகவல் சொன்ன பிறகு அவர் சகலவிதமான படையோடு புறப்பட்டுச் சென்று அவர்களைக் கண்டுபிடித்த பிறகுகூட, அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், லாரிகளை நிறுத்தி, அவர்களுக்குத் தடங்கல் ஏற்படுத்தி, தம்பிகளை இறங்கி வாருங்கள் என்று அன்போடு அழைத்த பிறகுகூட அவர்கள் துப்பாக்கியாலே வன்முறையிலே ஈடுபடுவதற்கு துணிந்திருக்கிறார்கள். அந்தப் போலீஸ் அதிகாரிகள் கைகளை உயர்த்திக்கொண்டு சுடாதீர், சுடாதீர் என்ற அளவுக்குச் சொல்லி, நின்ற பிறகும்கூட அவர்கள் தங்களுடைய மனம் இரங்காத நிலையிலே அங்கே சுட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறார்கள். கணப்பொழுதிலேகூட பலரை கட்டிப் பிடித்து இழுத்து வருகிற ஆற்றல் பெற்ற போலீசார் கையை தூக்கி என்னை சுட்டுவிடாதே என்று பரிதாபகரமாகச் சொல்லும் நிலையிலே நிலைமை போகும் அளவுக்கு நமக்கு அன்றைக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது போலீஸ்காரர் ஒருவரைச் சுட்டு, பக்கத்தில் நின்ற போலீஸ்காரர்கள் 15 பேரைக் காயப்படுத்தி, மற்றவர்கள் எல்லாம் தரையிலே, உருண்டு, உருண்டு, ஓடி, ஓடி தப்பித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அங்கே ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. துரத்துவார்கள் என்று எண்ணிய பிறகு, அந்தப் போராளிகள் போலீஸ்காரர்களுடைய ஜீப் கார்களுடைய டயர்களை நோக்கிச் சுட்டு, அவர்களைத் தொடர்ந்து வர விடாமல் தடுத்து நிறுத்தி

யிருக்கிறார்கள். ஆனால் அதே காரியத்தை நமது போலீசால் ஏன் செய்ய முடியவில்லை ? நமது போலீஸ்காரர்கள் ஏன் அவர்கள் ஓட்டி வந்த இரண்டு கார்களின் டயர்களை நோக்கிச் சுட்டு, அந்தக் கார்களை ஏன் தடுத்து நிறுத்த முடியவில்லை என்று தெரியவில்லை. அவர்கள் போகிற வழியிலே கருப்பையா என்ற தொழிலாளியை சுட்டு, அவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஏற்கெனவே சுப்பிரமணி என்று சொல்லப்படுகிற ஆயுதப் போலீஸ் படையைச் சார்ந்தவர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். இப்படி சுட்டுக்கொண்டே மீமிசல் வரை போய், வேதாரண்யம் கடற்கரையிலே இருந்து தப்பி விட்டதாகச் சொல்லுகிறார்கள்.

ஆனால், நமது டி.ஜி.பி. அவர்கள் என்ன சொல்லுகிறார் என்று சொன்னால், அவர்கள் தொண்டியிலிருந்து தப்பிவிட்டதாகச் சொல்லுகிறார். இன்னொரு புறத்திலே என்ன சொல்லுகிறார்கள் என்றால், அவர்கள் பயன்படுத்திய கார்கள் திருச்சியிலே காணக் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்திலே, படத்தோடு ஒரு செய்தி வெளி வருகிறது. மதுரையிலே ஒரு பிரபல அரசியல் தலைவருக்குச் சொந்தமான அல்லது அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தத் தகுந்த ஒரு இடத்திலே அந்தக் கார்கள் நின்று கொண்டிருக்கின்றன, விரைவிலே கண்டுபிடித்து விடுவோம் என்று சொல்லுகிறார்கள். மரியாதைக்குரிய போலீஸ் அதிகாரி சொல்லுகிறபோது, ஒன்றைச் சொல்கிறார். அவர்கள் ஈவு இரக்கமற்றவர்கள், நாகரீகம் அற்றவர்கள், கொலைகாரர்கள் என்றெல்லாம் சொல்லுகிறார். நமது முதல்வர் அவர்கள் மதுரையிலே பேட்டி கொடுக்கும் நேரத்திலே, இதே உணர்வை வெளிப்படுத்தியதோடு, 'நான் மற்ற போராளிக் குழுக்களோடு, விடுதலைப் புலிகளோடு, எல்லோரோடும் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் இது நடந்திருக்கிறது, இதிலே ஏதோ சதி இருக்கிற'தென்று சொல்லுகிறார். ஒரு நாளேடு எழுதுகிறது, விடுதலைப் புலிகள் அன்றுதான் பேச்சை முடித்து, கொழும்புக்கு விமானத்திலே போகிறார்கள், அதற்கு முன்னாலே பேச்சு வார்த்தைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கு வந்த இரண்டாம் மட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்களாக இருக்குமோ என்ற ஐயத்தை வேறு எழுப்புகிறது. யார் என்று நமக்குத் தெரியாது. எந்த போராளிக் குழு என்று நமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் ? இந்திய ராணுவத்தையே எதிர்த்தவர்கள் நாங்கள் என்று வீராப்பு பேசுகிறார்கள். இந்திய ராணுவத்தையே எதிர்த்தவர்கள் என்று சொன்னால், அந்த ஏகாரத்திற்குப் பொருள் என்ன என்று நம்முடைய முதல்வரவர்களுக்கும் தெரியும், நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். நீங்கள் எல்லாம் துச்சம் என்று பேசுகிற அளவுக்கு "அந்தப் போராளிகளுக்கு நெஞ்சுத் துணிவு" எப்படி ஏற்பட்டது ? அந்த அதிகாரிகள் யாராக இருந்தாலும் சரி,

1990 மார்ச் 22] *[திரு. குமரி அனந்தன்]*

அந்த அரசியல் தலைவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் அடையாளம் காட்டப்படுவார்கள் என்று நமது முதல்வரவர்கள் மதுரையில் சொன்னார்கள். இன்னும் அடையாளம் காட்டப் படவில்லையே, ஏன்? அந்த அதிகாரிகள் யார்? அந்த அரசியல் தலைவர்கள் யார்? ஊடே நின்றுகொண்டிருக்கும் அந்த மனிதர் கள் யார்? வள்ளுவனுடைய குறளைப் பார்த்து நாம் ஒவ் வொரு நாளும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்தக் குறள்படி நடக்க வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக் கிறோம். ''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்'' என்ற குறளை நான் சொல்ல வேண்டியதில்லை. வேந்து, இந்தச் சமுதாயத்திற்குத் தேவையில்லாமல் இருக்கிறவர்களை கொலைத் தண்டனை மூலம்கூட அகற்றுவது, பயிர்களைக் காப்பாற்றுவதற்கு களையைப் பிடுங்கி எறிவதற்குத் தகுந்தது என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். இன்று பேங்கு கொள்ளைகள் அதிகப்பட்டுவிட்டன. தாய்மார்களுடைய தாலிகள் அறுக்கப்படுகின்றன. வீட்டுக்குள் இருக் கிறவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத அளவுக்கு கதவு உடைக்கப்பட்டு, துப்பாக்கி முனையிலே நகை நட்டுக்கள் பறி போகின்றன. நமது ராணுவத்தையும், போலீசையும் அவமானப்படுத்தும் அளவுக்கு செயல்படுகின்ற இவர்கள் யார்? இவர்கள் பிடிக்கப்படுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது? அவர்களைப் பிடிப்பது மட்டுமல்லாமல், பிடித்து அவர்களை நாம் நடத்துகின்ற விதத்திலே வேறு எவனுக்கும் தமிழகத்தில் வாலாட்டுகின்ற துணிச்சல் வராத அளவுக்குச் செயல்படுகின்ற திட்டத்தை நமது அரசாங்கம் வைத்திருக் கிறதா? யார் அந்த முகமூடிகள்? யார் அந்தத் திரைக்குள்ளே இருக்கிறவர்கள்? அத்தனை பேரையும் வெளிக் கொண்டு வருகின்ற அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்றால் தமிழகத்தில் பீதி ஏற்படும், தமிழகத்திலே அப்படிப்பட்ட உணர்வு ஏற்படும். இவைகள் எல்லாம் மற்றவர்கள் நம்மைப் பார்த்து கேவலமாகப் பேசும் ஒரு நிலையை ஏற்படுத்தும். எனவே இந்தக் கொடியவர்களை எல்லாம் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது? யார் யார் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து, பிற அலுவல்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவே என்னுடைய வேண்டுகோள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்ததன் மூலம்., இராமநாதபுரம்—மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்ற சம்பவத்தை மாத்திர மல்லாமல் வேறு சில முகமூடித் திருடர்கள் பங்கு பெற்ற சம்ப வங்களையும் இங்கே எடுத்துக் கூறி, இந்திய இராணுவத்தையே

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மார்ச் 22

வென்றவர்கள் என்று சொன்னார்கள் என்று குறிப்பிட்டு, அப்படிச் சொன்னவர்கள் விடுதலைப் புலிகள் என்பதைச் சூசகமாக அவர் இங்கே வெளியிட்டு, ஒருவேளை அந்தச் சம்பவத்திலே கலந்து கொண்டவர்களும் அவர்கள் தானோ என்கின்ற ஐயப்பாடு எழுகின்ற வகையில் தன்னுடைய உரையை இங்கே நிகழ்த்தி இருக்கிறார்.

10-20 மணி

18—2—1990 அன்று இரவு சுமார் $10\frac{1}{2}$ மணியளவில் இராமநாதபுரம்—மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் பட்டணம் காத்தான் என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் காவலர்கள் பணியில் இருந்தபோது ஒரு மாருதி ஜிப்சி வண்டியும், அம்பாசிடர் டி.ஏ.ஏ. 9439 என்ற எண்ணுள்ள ஒரு காரும் மேற்படி சோதனைச் சாவடி அருகே வந்தன. தலைமைக் காவலர் திரு. ஜெயினுலாதீன் என்பவர் வண்டிகளை நிறுத்தி, சோதனையிட வேண்டும் என்றார். மேற்படி வண்டிகளிலே இருந்தவர்கள் தங்களிடமிருந்த தானியங்கித் துப்பாக்கிகளைக் காட்டி, மிரட்டி தடையை மீறி மண்டபம் சாலையிலே போய்விட்டார்கள். சுமார் $10\frac{3}{4}$ மணியளவில் டி. எஸ். இ. 2954 என்ற பதிவு எண் கொண்ட ஒரு வெள்ளை மாருதி கார் சோதனைச் சாவடியைத் தாண்டி அதே வழியில் வேகமாகப் போய் விட்டது. தலைமைக் காவலர் ஜெயினுலாதீன் அதனை உடனடியாக மேல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார். தகவல் அறிந்த இராமநாதபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் நகரிலிருந்த காவலர்களை எல்லாம் ஒன்றுபடுத்தி, மண்டபம் முகாமலிருந்த சிறப்புக் காவல் படையினரையும் சேர்த்து மேலே குறிப்பிட்ட வாகனங்கள் மண்டபம் அகதிகள் முகாமிற்குச் சென்று இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் மண்டபம் முகாமிற்குச் சென்றார்கள். அங்கு அந்த வாகனங்கள் காணப்படாததால் அவர் தன் குழுவினரோடு இராமநாதபுரம் திரும்பி வரும் வழியில் பிரப்பன்வளசை என்ற இடத்தில் அந்த 3 வாகனங்கள் சென்று கொண்டு இருப்பதைப் பார்த்து, அவர்களைத் துரத்தி பட்டணம்காத்தான் சோதனைச் சாவடி அருகிலே காவலர்களை நிறுத்தியும், சோதனைச் சாவடியிலே தடைகளை ஏற்படுத்தியும் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினர் மேற்படி 3 வாகனங்களையும் வளைத்து நிற்க வைத்தார்கள். காரில் இருந்தவர்கள் தாங்கள் தப்பிக்க வேறு வழியே இல்லை என்று தெரிந்த உடன், ஏ. கே. 47 மற்றும் இதர ரகத் துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாகச் சுட ஆரம்பித்தார்கள். ஏ. கே. 47 என்பது குறி பார்த்துச் சுட வேண்டிய அவசியம் இல்லாத ஒரு ஆயுதம் ஆகும். அதைக் கையிலே வைத்துக் கொண்டு சுழற்றினாலே பல பேரை ஒரே நேரத்தில் வீழ்த்தக் கூடிய அளவுக்கு அதிலிருந்து இரவைகள் அவ்வளவு வேகமாகக் கிளம்பக்கூடிய ஒரு நவீன துப்பாக்கி ஏ. கே. 47 என்பது.

1990 மார்ச் 22] *[டாக்டர் மு. கருணாநிதி]*

சோதனைச் சாவடியில் நின்று கொண்டு இருந்த ஒரு தனியார் லாரியிலும், காவல் துறை வண்டிகள் மீதும் அவர்கள் ஏ. கே. 47 மூலமாகச் சரமாரியாகச் சுட்டிருக்கின்றார்கள். இதில் சிறப்புக் காவல் படை 6-வது பிரிவைச் சேர்ந்த காவலர் சுப்பிரமணியம் என்பவர் தலையிலும், மார்பிலும் குண்டுக் காயம் பட்டு அந்த இடத்திலேயே மாண்டுவிட்டார். காவல் துறையைச் சேர்ந்த 10 காவலர்களும், ஒரு ஆய்வாளரும் காயமடைந்து இருக்கிறார்கள். ஆய்வாளர் கருப்பையா தன்னிடமிருந்த சுழல் கைத் துப்பாக்கியால் 5 ரவுண்டுகள் காரில் இருந்தவர்களைப் பார்த்து சுட்டார். காரில் இருந்தவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொண்டே இராமநாதபுரம் நகர் வழியாகத் தொண்டி செல்லும் சாலையிலே சென்றார்கள். காவல் துறைக் கண்காணிப்பாளர் காவல் நிலையத்திற்கு அதாவது முன்கூட்டியே பட்டணம்காத்தான் சாவடியிலிருந்து கேணிக்கரை காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்ததன் அடிப்படையில், கேணிக்கரை காவல் நிலையத்திலே பணியில் இருந்த காவலர்கள் அருகாமையில் உள்ள பொதுமக்கள் உதவியோடு மேற்படி வாகனங்களை நிறுத்த முயற்சித்த போது அங்கேயும் அந்த வாகனங்களில் இருந்தவர்கள் சுட்டார்கள். இதில் சாலை ஓரம் படுத்துக் கொண்டு இருந்த கருப்பையா என்ற 50 வயதுடைய ஒரு தொழிலாளி துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இறந்தார். பொது மக்களில் 4 பேர் காயமடைந்தார்கள். வாகனங்களைத் தொடர்ந்து சென்றபோது தேவிப்பட்டிணம் அருகே கோப்பேரிமடம் சோதனைச் சாவடி அருகில் காவலர்கள் மேற்படி வாகனங்களை நிறுத்த முயன்றபோது அங்கேயும் கண்மூடித்தனமாகச் சுட்டார்கள். காவலர்கள் தங்களிடமிருந்த மஸ்கட் மூலமாக அவர்களைத் திருப்பிச் சுட்டார்கள். இது சம்பந்தமாக கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்கள் 107/90, 108/90 பிரிவு 147, 148, 307, 302 மற்றும் 25 (1) ஆயுதச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் சரகத் துணை காவல் துறைத் தலைவர் தலைமையில் ஒரு தனிப் புலனாய்வுக் குழு மேற்கண்ட 3 வழக்குகளையும் புலன் விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் தொடர்புடைய டி.ஏ.ஏ. 9439 என்ற பதிவு எண் உள்ள வெள்ளை நிற அம்பாசிடர் கார் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, எந்தப் பெரிய தலைவருக்கும் — மதுரையில் உள்ள தலைவருக்குச் சொந்தமானதாக, யார் சொன்னதாகப் பத்திரிகையில் வந்தது என்று எனக்குத் தெரியாது.

10-25 மணி.

ஆனால், இப்பொழுது கைப்பற்றப்பட்டிருக்கின்ற டி.ஏ.ஏ. 9439 என்ற அந்த அம்பாசிடர் கார் — அதனுடைய உரிமையாளர் ராமச்சந்திரமூர்த்தி செட்டியார், தகப்பனார் பெயர்

சொக்கலிங்கம் செட்டியார், எண். 45, சொக்கப்பன் நாயக்கன் தெரு, மதுரை என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது தனி புலன் விசாரணைக் குழுவால். அந்தக் காரை வைத்துக் கொண்டு இப்பொழுது புலன விசாரணை தொடர்நது நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. சம்பவத்திற்குப் பின்னர் உடனடியாகக் காவல்துறை இயக்குநர் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் இராமநாதபுரம், மண்டபம் முதலிய பகுதிகளைப் பார்வையிட்டு, இது போல் சம்பவம் இனிமேல் நடைபெறாமல் இருக்கவும், அப்பகுதி மக்களுக்கும், மண்டபத்திலே உள்ள இலங்கை அகதிகளுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மிக அதிகமாகப் பலப்படுத்தியுள்ளார்கள். பாம்பன், பட்டணம்காத்தான், கலுங்கு, திருப்புலாணி, கோப்பேரிமடம் ஆகிய இடங்களிலுள்ள காவல் சோதனைச் சாவடியில் மணல் மூட்டைகளிலான பதுங்கும் குழிகள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு தனி ஆயுதப் போலீசார் பணியில் அமர்த்தப்பட்டு, அவர்களுக்கு இயந்திரத் துப்பாக்கிகளும் இப்பொழுது வழங்கப்பட்டிருக்கின்றன. மண்டபம் அகதிகள் முகாமிலே நான்கு கண்காணிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இயந்திரத் துப்பாக்கிகளோடு காவல் குழு நிலை கொண்டுள்ளது. வெளியாரிடமிருந்து அகதிகள் மீது தாக்குதல் ஏற்பட வாய்ப்பிருந்தால் அதனை முறியடிக்கவும், சந்தேகத்திற்கு இடமான முறையில் அப்பகுதி கடற்கரையோரங்களில் நடமாடும் படகுகளைக் கண்காணிக்கவும் இந்த ஏற்பாடாகும்.

இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட இரண்டு ஜீப்புக்களில் காவலர்கள் முகாமைச் சுற்றி எந்நேரமும் ரோந்து செய்யவும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகப் பொருட்களை, அதாவது ஆயுதங்கள் அல்லது வெடி மருந்துகள் அல்லது வெடிக்கக்கூடிய பொருட்கள், இவைகளை மோப்ப சக்தி மூலம் கண்டு பிடிக்க மோப்ப நாய்கள் அங்கே பணியிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மண்டபம், இராமேஸ்வரம், மற்றும் இராமநாதபுரம் கடற்கரையோரங்களில் இரகசியப் புலனாய்வுப் பணியும் இப்பொழுது முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

விரைந்து தகவல்களைப் பெறவும், மக்கள் ஒத்துழைப்பை நாடவும் கடற்கரைக் கிராமங்களில் கண்காணிப்புக் குழுக்களும் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளன. கடற்கரைச் சாலைகளில வாகன ரோந்துப் பணி அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் எந்த விதப் பீதியும் அடையா வண்ணம் தற்சமயம் இராமநாதபுரம் பகுதியில் முழுப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் எந்தக் குழுவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் இது போன்ற செயல்களில் தன்னை ஈடுபடுத்த முற்பட்டால் அதனை முழு மூச்

சோடு முறியடிக்கவும், சட்டப்படி அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும் காவல் துறை பணிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சுப்பிரமணியம் என்ற போலீஸ்காரருக்கு, அவர்களுக்குப் பணிக் காலத்திலே இறந்தால் தர முடியும் என்கின்ற அளவிற்கு அறிவிக்கப்பட்ட 40,000 ரூபாயும், அதற்கு மேலும் 10,000 ரூபாயாக 50,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உயிரிழந்த தொழிலாளி திரு. கருப்பையா குடும்பத்திற்கு 10,000 ரூபாய் உதவித் தொகை தரப்பட்டிருக்கிறது.

காயமுற்றவர்களுக்கெல்லாம், தலைக்கு 3,000 ரூபாய் வீதம் சிகிச்சை நிதியாக உடனடியாக அன்றைக்கே, செய்தி கேள்விப் பட்ட சில மணி நேரத்திற்கெல்லாம் மதுரையில் இருந்த நான் இந்த அறிவிப்பைச் செய்து, அதன்படி அவர்களுக்கெல்லாம இது வழங்கப்பட்டிருக்கின்றது.

எந்தப் போராளிக் குழு என்று இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும், இது போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடைபெறுவதற்கு நாம் நிச்சயம் இடமளிக்க மாட்டோம். இந்த அரசு இடமளிக்காது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கினறேன்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற சில நாட்களுக்குப் பிறகு சத்தீஷ் என்ற ஒரு வாலிபர், ஏ. கே. 47 துப்பாக்கியோடு கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் அந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர், தான் ஈ.பி.ஆர். எல்.எப்.ஐச். சேர்ந்தவர் என்று கூறி யிருக்கிறார். ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐச் சேர்ந்த சத்தீஷ் கைது செய்யப்பட்டு, சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார். அவரிட மிருந்த ஏ. கே. 47 துப்பாக்கி கைப்பற்றப்பட்டிருக்கிறது.

அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும் அல்லது ஈ.பி.ஆர்.எல். எப். ஆக இருந்தாலும், டெலோவாக இருந்தாலும், யாராக இருந்தாலும், இப்பொழுது இலங்கையிலே ஏற்பட்டு விட்ட ஒரு சூழ்நிலைக்குப் பிறகு தமிழகத்திலே அவர்கள் போராளிகளாக நடமாடவோ, ஆயுத பாணிகளாக நடமாடவோ அவர்கள் இங்கே கூடாரங்கள் அமைத்துக் கொண்டு பயிற்சி பெறவோ, நிச்சயமாக இடம் தர மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

10-30 மணி.

திரு. எம். அப்துல் லத்திப் ; தலைவர் அவர்களே, ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொதுப் பிரச்சினை பற்றி நான் நேற்றைய தினம் தங்களிடத்தில் அறிவிப்புக் கொடுத்தேன். இன்று எடுத்துக் கொள்வதாக தாங்கள் சொன்னீர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நானா சொன்னேன்? நான் சொல்லவில்லை.

திரு. எம். அப்துல் லத்திப் : சொன்னீர்கள், செயலாளரைக் கேளுங்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மேலும், ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கிறபோது அதே நாளில் இன்னொன்றை எடுக்க முடியாது.

திரு. எம். அப்துல் லத்திப் ; நாளைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லுங்கள். கொடுக்கவே இல்லை என்று சொன்னால் அது சரியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது குறித்து ஆய்வு செய்து தான் சொல்ல முடியும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1990-91, பொது விவாதம்--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்து, இன்றைக்கு விவாதத்தில் அதிகம் பேர்கள் பங்கு பெற வேண்டுமென்று அனைத்துக் கட்சியினரும் விரும்பகிற காரணத்தாலும், காலையிலும், மாலையிலும் இந்த அவை தொடர்ந்து நடைபெறுவதாலும், எத்தனை பேருக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க முடியுமோ அத்தனை பேருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டு உள்ளனர். ஒவ்வொருவருக்கும் சரியாக 10 மணித் துளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதை மீறினால் அடுத்த உறுப்பினர் அழைக்கப்படுவார் என்பதை மனதில்